067097

01.07.2024 முதல் 31.12.2024
ஆறு மாதங்களுக்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

07/10/2024
இ3

**கடித எண். 7285 /பக5(1)/2024 –1, நாள். 04.10.2024**

அனுப்புநர்
திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

07 OCT 2024

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

www.Padasalai.Net

பொருள்: பள்ளிக் கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் – அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2019 நிலவரப்படி மாணவர்கள் ஆசிரியர் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து அனுமதிக்கப்பட்ட 107 ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை IFHRMS இல் பதிவேற்றம் மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது – இப்பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization ) வழங்குதல்–சார்பு.

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 105, பள்ளிக் கல்வித் (ப.க5(1)) துறை, நாள்.10.06.2022.
2. கடித எண்.1519/ப.க5(1)/2024–1, நாள்.27.02.2024.
3. பள்ளிக் கல்வி இயக்குயரின் கடித ந.க.எண்.019616/எல்/இ3/2023, நாள் 02.07.2024.

---

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், ஏனையவற்றோடு, அரசு/நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2019 அன்றைய நிலவரப்படி மாணவர்கள் ஆசிரியர் எண்ணிக்கையின் அடிப்படையில் வெவ்வேறு மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதர படிகள் ஆகியவற்றினை நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்க ஏதுவாக இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட 107 ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (Surplus Post without Person) தோற்றுவிக்கப்பட்ட வெவ்வேறு அரசாணைகளை ஒருங்கிணைத்தும், அப்பணியிடங்களுக்கு, அப்பணியிடங்களில் பணியாளர்களை நிரப்பிய நாளிலிருந்து

www.Padasalai.Net

ஒரு ஆண்டிற்கு மட்டும் தொடர் நீடிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், மேற்காணும் 107 ஆசிரியரின்றி உபரி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.02.2024 முதல் 30.06.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டு முடிவுற்ற நிலையில் பார்வை 3-இல் காணும் கடிதத்தில் தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை(Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்குறிப்பிட்டுள்ள 107 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. இக்கடிதம் இத்துறையின் மின்கோப்பு எண். 7285/ ப.க5(1)/2024, நாள்.04.10.2024-இல் நிதித்துறையிடம் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது

தங்கள் நம்பிக்கையுள்ள,

7/10/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

7/10/24

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6
நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.
சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வியக்ககநரக ந.க.எண்: 019616/எம்/இ3/23 நாள்: 07.10.24

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது,

7/10/24
இணை இயக்குநர்.

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

07/10/24